பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 12 (28—9—72) வியாழன்   வெளியூர்: புரட்டாசி 13 (29—9—72) வெள்ளி [இதழ்: 88

கொள்ளிடக் கரையில் காகிதத் தொழிற்சாலை

"அண்மையில் தமிழ்நாட்டிற்கு வந்த இந்திய அரசு நிபுணர்கள் குழு, காகித ஆலை ஒன்று நிறுவுவதற்குத் தென்னாற்காடு மாவட்டத்தில் கொள்ளிடம் நதிக் கரையில் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறது"

என்ற தகவலை, கூட்டுறவுத் துறை அமைச்சர் சி.பா. ஆதித்தனார் தெரிவித்தார்.

ஈழத் தமிழகத்தின் எழுச்சி முரசம்

உதயசூரியன் கொடியின்கீழ் உரிமைப் போர் துவங்கும்

செல்வநாயகம் தலைமையில் திரள்கிறது தமிழ் இனம்

சிங்கள வெறியை எதிர்த்துக் களம் அமைகிறது இலங்கையில்!

கொழும்பு, செப். 28—

'உதயசூரியன்' கொடியின் கீழ் ஈழத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டுத் தங்கள் உரிமைக்குப் போராட முடிவு செய்துவிட்டனர்; போராட்டத் தொடக்கத்துக்கான நாளும் குறிக்கப்பட்டு விட்டது.

அண்ணல் காந்தி வழியில் அறப் போராட்டம் நடத்தவிருக்கும் அவர்கள், காந்தியார் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் நாளையே தங்கள் போராட்டத் துவக்க நாளாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

நீண்ட நெடுங்காலமாக நெல்லிக்காய் மூட்டையெனச் சிதறிக்கிடந்த ஈழத் தமிழர்கள்--பல்வேறு கட்சிகளின் பேரால் ஒற்றுமையின்றித் தனித்தனி இலட்சியங்களுடன் இயங்கிய அவர்கள்--இன்று, 'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்--வீறு கொள் கூட்டம்--அன்னார் உள்ளத்தால் ஒருவர்' ஆகி, 'கிளம்பிற்று காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்' என்று பறைசாற்றி, சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள் தீராதி தீரர் என்று ஊதூது சங்கே' என முழங்கி 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' எனச் சூளுரைத்து, 'தமிழைப் பழித்திட்டவனை தாய் தடுத்தாலும் விடோம்' என்று எச்சரித்துத் தங்கள் அறப்போரைத் தொடங்கவிருக்கின்றனர்!

இலங்கைத் தமிழ் மண்ணுக்கு உரிய உரிமையைப் பெற்றிட இதுவே இறுதிப் போராக அமையும் என்பதில் ஐயமில்லை!

கட்சிகளால்--கொள்கைகளால் பலராய் இருந்த ஈழத் தமிழர் தமிழ் மொழியால்--தமிழ் இனத்தால் ஒருவராகிவிட்டனர்; இனி ஆட்சியாளரின் பிரித்தாளும் சூழ்ச்சியும், தட்டிக்கழிக்கும் போக்கும் செல்லுபடியாகாது என்பதற்கான அறிகுறிகள் தென் திசையில் தெரிகின்றன!

ஈழத்துக் காந்தியாம் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் தமிழ் இனம் திரண்டு நிற்கிறது--களத்தில் இறங்க!

சிங்களவர்களுடன் தமிழர்களுக்குச் சம உரிமை அளிக்கும் வகையில் இலங்கையின் புதிய அரசியல் சட்டங்களுக்குத் திருத்தம் கோரி கிளர்ச்சி நடத்தப்படும்.

தமிழ் மொழி பேசும் வடக்கு மாகாணத்திலும்--கிழக்கு மாகாணத்திலும் தமிழர் ஐக்கிய முன்னணி, அக்டோபர் 2-ந் தேதியன்று (காந்தி பிறந்த நாளன்று) பொது வேலை நிறுத்தம் — கடையடைப்பு நடத்த முடிவு செய்துள்ளது.

இலங்கையில் மொத்த மக்கள் தொகையில் 22 சதவிகிதம் பேர்களான தமிழர்கள் காந்தி பிறந்த நாளை, 'பிரார்த்தனை நாள்' ஆகக் கொண்டாட வேண்டுமென்றும்--அன்று கடைகளைத் திறக்கக் கூடாது என்றும்--பள்ளிக்கூடங்களுக்கும், அலுவலகங்களுக்கும் போகக்கூடாது என்றும்--இல்லங்களிலேயே தங்கியிருக்க வேண்டுமென்றும் தமிழர் ஐக்கிய முன்னணி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

செயல் திட்டத்தை இறுதியாக்குவதற்காக யாழ்ப்பாணத்தில் கூடிய முன்னணியின் செயற்குழு இவ்வாறு முடிவு செய்தது.

செயற்குழு நடைபெற்ற கட்டடத்தின்மீது, தமிழர்களின் தேசியக் கொடியாக முன்னணி தேர்ந்தெடுத்துள்ள 'உதய சூரியன்' கொடி பறந்து கொண்டிருந்தது.

முன்னணியின் ஆறு அம்சக் கோரிக்கையின் பிரதியுடன் முன்னணியின் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் இலங்கைத் தலைமையமைச்சருக்கு கடிதம் ஒன்று அனுப்பியிருந்தார்; அந்தக் கடிதம் வந்து சேர்ந்ததாக தலைமையமைச்சர் திருமதி சிரிமாவோ எழுதியிருந்த பதில் கடிதம் சிங்கள மொழியில் எழுதப்பட்டு--அத்துடன் அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் வைக்கப்பட்டிருக்கிறது; சிங்கள மொழிக் கடிதத்தில் மட்டுமே சிரிமாவோ (சிங்களத்தில்) கையெழுத்திட்டிருக்கிறார்; தமிழ் மொழிபெயர்ப்பில் அவர் கையெழுத்து இல்லை; எனவே, தலைமையமைச்சரின் பதிலை அவருக்கே திருப்பியனுப்பிவிட திரு. செல்வநாயகத்திற்கு செயற்குழு அதிகாரம் வழங்கியது.

பத்துக் கட்டளைகள்

தமிழர்களின் நோக்கங்களை கைகூடுவதற்காக அவர்கள் பின்பற்றவேண்டிய 'பத்துக் கட்டளை'களையும் முன்னணி இறுதியாக்கியிருக்கிறது; செப்டம்பர் 30-ந் தேதி தமிழ்ப் பகுதிகளில் நடத்தப்படவிருக்கும் பொதுக் கூட்டங்களில், முன்னணித் தலைவர்கள் அந்தக் கட்டளைகளை அறிவிப்பார்கள்.

தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவுசெய்ய அரசுக்கு தமிழர் ஐக்கிய முன்னணி அளித்துள்ள மூன்று மாதக் கெடு, செப்டம்பர் 30-ந் தேதியன்றுதான் முடிவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பதவி விலகல்

முன்னணியைச் சேர்ந்த 13 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் விரைவில் தமது பதவியை விட்டு விலகி, மறு தேர்தலுக்கு நிற்பார்; தமிழர்களின் கோரிக்கையைக் கவனத்துக்குக் கொண்டு வரவும்--தமிழர்களிடையே முன்னணிக்கு உள்ள ஆதரவை அரசுக்கு எடுத்துக் காட்டவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசுக்கு அதிக வருமானம் அளிக்கக்கூடிய சில பொருள்களைப் பயன்படுத்தக்கூடாது என்றும், மற்றும் சில பண்டங்களை வாங்குவதைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்றும் தமிழர்களுக்கு வேண்டுகோள்விட முன்னணி முடிவு செய்துள்ளது; இந்தப் பண்டங்கள் எவை என்பது அறு இன்னும் குறிப்பிட்டுச்சொல்லவில்லை.

நில உச்சவரம்பு

பீகாரில் அவசரச் சட்டம்

பாட்னா, செப். 28—

பீகார் மாநிலத்தில் உச்சவரம்பு அளவுக்கு அதிகமாக உள்ள பயிரிடும் நிலங்கள் அல்லது நகர்ப்புற உடைமைகளை இவ்வாண்டு டிசம்பர் 31-ந் தேதி வரையில் பிறருக்கு மாற்றுவதைத் தடை செய்யும் ஓர் அவசரச் சட்டத்தைப் பீகார் ஆளுநர் பிறப்பித்தார்.

'பீகார் உடைமைகள் உச்சவரம்பு (மாற்றம் மீது தற்காலிகக் கட்டுப்பாடு) அவசரச் சட்டம்' என்று இச்சட்டத்திற்குப் பெயர்.

(பீகார் மாநிலத்தில் ஐந்து பேர் கணவன்--மனைவி மூன்று மைனர் குழந்தைகள்) கொண்ட ஒரு குடும்பம் வைத்துக் கொள்ளக்கூடிய நிலங்கட்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்சவரம்பும், ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பம் வைத்துக் கொள்ளக்கூடிய நகர்ப்புற உடைமைகளுக்கு உச்சவரம்பு ரூ. 2 இலட்சம் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பூட்டோ ஆட்சிக்குத் தலைவலி

கூட்டாளிகள் மூவர் விலகல்?

இராவல்பிண்டி, செப். 28—

பாகிஸ்தானில் பூட்டோவின் அமைச்சரவையிலிருந்து 3 முக்கிய அமைச்சர்கள் இராஜினாமா செய்துவிட்டதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

பஞ்சாபில் மின்சார வெட்டு

மிச்சப்படும் மின்சாரம் விவசாயப் பணிகளுக்கு!

சண்டிகார், செப். 28—

பஞ்சாப் மாநிலத்தில் வீடுகளிலும்--வர்த்தக நிறுவனங்களிலும் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்குக் கடும் வெட்டினைச் செயல்படுத்த பஞ்சாப் அரசு முடிவு செய்திருக்கிறது.

அக். 15-ந் தேதியிலிருந்து இவற்றுக்கு நாள்தோறும் மாலையில் 2-மணி நேரம் மட்டுமே மின்சார சப்ளை கிடைக்கும்.

எல்லாக் கடைகளும் மாலை 5-மணிக்கு மூடப்பட்டுவிடும்; இருள் கப்பிய இரவுகளில் மட்டுமே தெருவிளக்குகள் எரியும்.

மருத்துவமனைகளுக்கு மட்டும் மின்சார சப்ளை வழக்கம்போல் அளிக்கப்படும்.

திருமணங்களுக்கும்--விளம்பர போர்டுகளுக்கும் அலங்கார விளக்குகள் அமைக்க மின்சார சப்ளை தரப்படமாட்டாது.

"வீடுகளுக்கும்--வர்த்தக நிறுவனங்களுக்கும் சப்ளையைக் குறைப்பதால் மிச்சமாகும் மின்சாரம் குழாய்க் கிணறுகளின் பயனுக்குக் கொடுக்கப்படும்" என்று பஞ்சாப் பாசன அமைச்சர் குர்மயில் சிங் கூறினார்.

அரியானாவில் நில உச்சவரம்பு

இருபோக சாகுபடி நிலம் 18 ஏக்கராம்

சண்டிகர், செப். 28—

மத்திய அரசு தெரிவித்துள்ள அளவில் நில உச்சவரம்பு மசோதாவை அரியானா அமைச்சரவை இறுதியாக்கியது.

அக்டோபர் 3-ந் தேதி தொடங்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்த மசோதா கொண்டுவரப்படும்.

இரு போக சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கு 18 ஏக்கர்--ஒரு போக சாகுபடி உள்ள நிலங்களுக்கு 27.5 ஏக்கர் என்று உச்சவரம்பு நிர்ணயிக்க வகைசெய்வதாகத் தெரிய வருகிறது.

தரிசு நிலங்களுக்கான உச்சவரம்பு 54 ஏக்கராக இருக்கும்; திராட்சைச் சாகுபடி செய்யப்படும் தோட்டங்களுக்கு உச்சவரம்பிலிருந்து விலக்கு எதுவும் தரப்படவில்லை; இலாப நோக்கத்துடன் இராத 'கோ சாலை'களுக்கு மட்டும் விலக்கு உண்டு எனத் தெரிகிறது.

கணவன்--மனைவி--மைனர் குழந்தைகள் கொண்ட குடும்பம் ஒரு யூனிட்டாகக் கருதப்படுவர்; குடும்பத்தில் வயது வந்தவர்கள் தனி யூனிட்டாகக் கருதப்படுவர்.

நகரச் சொத்துக்கு உச்சவரம்பு

மைசூர் முதலமைச்சரின் சூசக அறிவிப்பு

குல்பர்கா, செப். 27—

"நகரச் சொத்துக்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் உச்சவரம்பைவிடக் குறைவானதாகவே மைசூர் அரசு நிர்ணயிக்கும்"

என்று மைசூர் முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ் இங்கு சூசகமாகத் தெரிவித்தார்.

இங்கு பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர், 'மத்திய அரசு நிர்ணயிக்கும் உச்சவரம்பு என்ன என்று முடிவு செய்யப்படவில்லையாயினும், அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அது முடிவாகக் கூடும்' என்று கூறினார்.

மத்திய அரசு ரூ. 5 இலட்சம் உச்சவரம்பு நிர்ணயிக்கலாம் என்றும், மைசூர் அதைவிடக் குறைவாகவே உச்சவரம்பு நிர்ணயிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் நில நடுக்கம்

இராவல்பிண்டி, செப். 28—

நேற்று இராவல்பிண்டியிலும்--அதை அடுத்துள்ள தலைநகரான இசுலாமாபாத்திலும் இலேசான பூமியதிர்ச்சி பல தடவை ஏற்பட்டது.

ஆனால் ஆட்சேதம்--பொருட்சேதம் ஏற்பட்டதாக இதுவரையில் தெரியவில்லை.

புன்செய்ப் பயிர் முறைபற்றி மறு ஆய்வு

மத்திய வேளாண்மை அமைச்சர் கருத்து

புதுடில்லி, செப். 26—

"நாட்டின் புன்செய்ப் பகுதிகளில் பயிர்முறை பற்றித் தீவிர மறு ஆய்வு செய்யவேண்டும்"

என்று, மத்திய வேளாண்மை பக்ருதீன் அலி அகமது கேட்டுக் கொண்டார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"குறைந்த மகசூல் தரும் பயிர்கள்--குறைந்த வருமானம் தரும் நிலப் பயன்பாட்டு முறை ஆகியவற்றுக்குப் பதிலாக அதிக மகசூல் பயிர்கள் -- அதிக வருமான சாகுபடி முறைகள் ஆகியவற்றைப் படிப்படியாகக் கொண்டு வருவது நமது நோக்கமாக இருக்கவேண்டும்.

புன்செய் நிலங்களின் மோட்டா தானியங்கள் -- பருப்பு வகைகள் -- மற்றத் தானியங்கள் பயிரிடப்படுவதால் அந்தப் பகுதிகள் முக்கியமானவையாகும்; எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகியவற்றில் பெரும் பகுதி அதில் விளைகின்றன.

எப்பொழுதும் நல்ல பருவம் இருக்கும் என்று எதிர்பார்த்து, பருவ மழை தவறும்போது பீதியடையக் கூடாது; ஆகவே, மாற்றுப் பயிர் முறைகளை மேம்பாடு செய்ய வேண்டும்.

மதுரையிலும் மகளிர் பேருந்து

மதுரை, செப். 27—

"மதுரை நகரில் பெண்களுக்குத் தனி பஸ்கள் விடுவது குறித்து பரிசீலிக்குமாறு பாண்டியன் போக்குவரத்துக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது"

என்று போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"இந்தப் பஸ்களில் பெண் கண்டக்டர்களை நியமிக்கும் எண்ணம் இல்லை"

என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் மின் வெட்டு

அரசு விளக்கம்

சென்னை, செப். 27—

அக்டோபர் முதல் தேதி நடைமுறைக்கு வரவிருக்கும் மின்விசை வெட்டு சம்பந்தமாக அரசு மேலும் விளக்கம் அளித்திருக்கிறது.

"மாதம் ஒன்றுக்கு 100 யூனிட்டுக்கு மேற்படாமல் பயன்படுத்துவோருக்கும், குறைந்த அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்துவோருக்கும் மின்வெட்டு செயல்படுத்தப்படமாட்டாது" என்று அரசு விளக்கம் அளித்திருக்கிறது.

"இவர்கள் 100 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தினால், இரு மடங்கு கட்டணம் விதிக்கப்படும்" என்றும் அரசு தெரிவித்துள்ளது.

சாலை விபத்துக்களைத் தவிர்க்க நடவடிக்கை

ஓட்டுநர்களுக்கு லைசென்சு வழங்குமுன் பரீட்சை

அமைச்சர் இராமச்சந்திரன் அறிவிப்பு

கோவை செப். 27—

கோவையை அடுத்த திருப்பூரில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், செய்தியாளர்களிடம் தமிழ்நாடு வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் மாநாட்டில் விவாதிக்கப்பட்ட பிரச்சினைகள் -- முடிவு செய்யப்பட்ட பிரச்சினைகள் பற்றி விளக்குகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சாலை விபத்துக்களில் அதிகம் பேர் உயிர் துறக்கின்றனர்; இந்நிலையை மாற்ற முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை வேற்கொள்ள வேண்டுமென்று இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

"குடிபோதையில் டிரைவர்கள் லாரி ஓட்டுகிறார்களா என்பதை அறிய சாலைகளில் லாரிகளை நிறுத்தி அடிக்கடி திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட வேண்டும்; டிரைவர்களுக்கு லைசென்சு வழங்கும்போது அவர்களுக்கு நடத்தப்படும் சோதனைகள் அதிகரிக்கப்பட அவர்கள் பரீட்சையும் எழுத வேண்டும்; லைசென்சு வழங்குவதற்கு முன்பாக சரியான முறையில் டிரைவர்கள் சோதிக்கப்படாவிடில், அதற்கு லைசென்சு வழங்கும் அதிகாரியே பொறுப்பேற்க வேண்டும்; லைசென்சைப் புதுப்பிக்கும்போதும் டிரைவர்களுக்கு இத்தகைய சோதனைகள் நடத்தப்படுவது அவசியமாகும்"

என்று இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

ஆற்றுநீர்ப் பங்கீட்டுத் தகராறுகள்

இந்த ஆண்டிலேயே தீர்வு காண முயற்சி

புதுடில்லி, செப். 27—

இந்தியச் சுதந்தர வெள்ளி விழா ஆண்டிலேயே மாநிலங்களுக்கிடையயுள்ள ஆற்றுநீர்ப் பாசனத் தகராறுகளைத் தீர்த்துவிட வேண்டும் என்பதில் மத்திய அரசாங்க நீர்ப்பாசனத் துறை எல்லா முயற்சிகளும் எடுத்து வருகிறது.

பேச்சுவார்த்தைகளின் மூலம் நீர்ப்பாசனத் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட மாநிலங்களைத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும் -- நீர்ப்பாசன அமைச்சர் கே. எல். ராவும் வலியுறுத்தி வருகின்றனர்.

கங்கை நீர்த் தேக்கம் சம்பந்தப்பட்டது தவிர, 29 நீர்ப்பாசனத் தகராறுகள் இருக்கின்றன; இவைகளால் பல நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவது தாமதப்படுகின்றனவாம்.

உத்தரப் பிரதேசமும் -- மத்தியப் பிரதேசமும் தாங்களாகவே அண்மையில் 5 நீர்ப்பாசனத் திட்டங்களில் உடன்பாடு கண்டுவிட்டன.

"காவிரி நீர்ப்பாசனமும் குறித்து தமிழ்நாடு -- மைசூர் -- கேரளம் ஆகிய மாநிலங்களுக்கிடையே இன்னும் தகராறு, தீராமல் இருந்து வருகிறது" முதலமைச்சர் ஓர் உடன்பாட்டுக்கு வருவதற்கு உதவியான புள்ளி விவரங்கள் தயாரிக்க 4 பேர் கொண்ட தகவல் திரட்டும் குழு ஒன்று அமைக்கப்பட்டது; அந்தக் குழு தனது பணியை முடிக்காததால், அதன் பதவிக் காலம் செப்டம்பர் 15-ந் தேதியிலிருந்து மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது

இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், சம்பந்தப்பட்ட முதல்வர்கள் பேசி ஒரு தீர்வுக்கு வருவது இலகுவாக இருக்கும்" என்று மத்திய அரசாங்க நீர்ப்பாசனத் துறை கருதுகிறது.

இந்தியக் கயிற்றுப் பொருள்கள்

சீனவின் போட்டியால் ஏற்றுமதி பாதிப்பு

ஆலப்புழை, செப். 27—

"மேற்கு ஐரோப்பிய நாடுகளில் சீனக் கயிற்றுப் பொருள்களின் போட்டியில் இந்தியா கடுமையாகப் பாதிக்கப்படுகிறது"

என்று அந்நாடுகளுக்குச் சென்ற தூதுக் குழுத் தலைவர் கவலை தெரிவித்திருக்கிறார்; இத்தொடர்பில் அவர் குறிப்பிட்டதாவது:—

"கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 35 சதவிகித அளவுக்கு இந்நாடுகளுக்கான கயிற்றுப் பொருள் ஏற்றுமதியில்குறைவு ஏற்பட்டிருக்கிறது.

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யும் தேங்காய் நார்களால் உற்பத்தி செய்த பொருட்களை, சீன வெளிநாடுகளில் இந்தியாவைவிட 50 சதவிகிதக் குறைவான விலைக்கு விற்கிறது."

புதுக்கோட்டை நகர தி.மு.க. தோழர்கட்கு:

"நான் நோய்வாய்ப்பட்டு புதுக்கோட்டை மத்திய மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்று வருவதால் நான் இல்லம் திரும்பும் வரையில், கழகத் தொடர்பான அலுவல்களுக்குத் துணைச் செயலாளர் மூலம் தொடர்புகொள்ள வேண்டுகின்றேன்"

என்று புதுக்கோட்டை நகர தி.மு. கழகச் செயலாளர் எம். எஸ். அப்துல் மஜீத் அறிவிக்கிறார்.

தமிழ்நாட்டில் நிரோத் தொழிற்சாலை

1975-ல் உற்பத்தி துவங்கும்

புதுடில்லி, செப். 25—

தமிழ்நாட்டில் 'நிரோத்' தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது.

மத்திய அரசுக்குச் சொந்தமான 'இந்துஸ்தான் லேட்டக்ஸ்' நிறுவனத்தின் தலைவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:—

"இந்தியாவில் 'நிரோத்' பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

1967-ம் ஆண்டில் 1,65,00,000 'நிரோத்' உற்பத்தி செய்யப்பட்டது; இந்த ஆண்டு 17,35,00,000 நிரோத் தயாரிக்கப்பட்டுள்ளது; 1974-ம் ஆண்டு 28 கோடி நிரோத் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே, நிரோத் உற்பத்தியை அதிகரிக்கத் தமிழ்நாட்டில்புதிதாக ஒரு தொழிற்சாலை தொடங்கத் திட்டமிட்டுள்ளோம்; 1975-ம் ஆண்டுக்குள் இந்தத்தொழிற்சாலை செயல்படத் தொடங்கும்.

திருவனந்தபுரத்தில் இப்போது உள்ள தொழிற்சாலையை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது; பெண்களுக்கான கருத்தடை மாத்திரை தயாரிக்கப் புதிய தொழிற்சாலை அமைப்பது பற்றித் திட்டமிட்டு வருகிறோம்.

இப்போது 'நிரோத்' ஒரே நிறத்தால் இருக்கிறது; இதைப் பல நிறங்களில் தயாரித்து வெளியிட முடிவு செய்துள்ளோம்; சற்று வயதானவர்கள், கறுப்பு நிறத்தை விரும்புகிறார்கள்.

இளைஞர்கள் 'ரோஸ்' நிறத்தையும் -- மற்ற நிறங்களையும் விரும்புகிறார்கள்; ஒவ்வொருவரின் விருப்பத்திற்கு ஏற்றவாறு பல நிறங்களில் இனிமேல் நிரோத் தயாரிக்கப்படும்.

கடந்த ஆண்டு நிரோத் விற்பனை மூலம் ரூ. 6,15,89,000 நிகர லாபம் கிடைத்தது."

சென்னையில் ஆஸ்திரேலியப் பத்திரிகை ஆசிரியர்

தமிழ்மக்களின் விருந்தோம்பும் பண்புக்குப் பாராட்டு

சென்னை, செப். 27—

ஆஸ்திரேலிய நாட்டின் பிரபல பத்திரிகையான 'வியாலா நியூஸ்' என்னும் ஏட்டின் ஆசிரியர் திரு. டான் விண்டன், தமது விடுமுறை காலத்தைக் கழிக்க இந்தியாவுக்கு வந்துள்ளார்.

அவர் அண்மையில் சென்னைக்கு வந்திருந்தார்; அவருக்குச் சென்னையில் உள்ள உலகச் சுற்றுப்பயணிகள் சங்கத்தின் சார்பில் மயிலை 'சாந்தி விகாரி'ல் ஓர் வரவேற்புத் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. ஆர். சந்திரசேகரனும் -- செயலாளர் பி. வி. எச். பாபுவும் வரவேற்றனர்.

வரவேற்புக்கும் பதிலளித்துப் பேசிய திரு. டான் விண்டன், இந்தியாவுக்குத் தாம் இரண்டாவது முறையாக வந்திருப்பதாகவும், மீண்டும் ஒருமுறை வரவிரும்புவதாகவும் கூறினார்.

தம்மை இந்தியா வெகுவாகக் கவர்ந்திருக்கிறது என்றும், அதிலும் குறிப்பாகத தமிழ்நாடு மிகவும் கவர்ந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் இருக்கும்போது ஓர் அந்நிய நாட்டில் இருப்பது போலவே தமக்குத் தோன்றவில்லை என்றும், பெரும்பாலோருக்கு இங்கு ஆங்கிலம் தெரிந்திருப்பதால், எல்லோரிடமும் எளிதில் கலந்துரையாடும் வாய்ப்பு ஏற்படுவதாகவும், இதனால் தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவின் தேசிய மொழி இந்தியாக இருந்தும் ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருப்பதால் அந்நிய நாட்டினருக்கு மொழிச் சிக்கல் ஏற்பட வழியில்லாமல் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் தாம் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, நாடாளுமன்ற உறுப்பினர் எம். இராசாங்கம் தமக்கு உறுதுணையாக இருந்து -- கிராமியத் திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ளச் செய்தும், கிராம மக்களின் பழக்க வழக்கங்களை அறியும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததாகவும் அவர் கூறினார்.

சுற்றுலா வளர்ச்சிக்கு இந்தியாவில் நல்ல எதிர்காலம் இருக்கிறது என்றும், சுற்றுலாவை ஒரு தொழில் முறையாக வளர்க்க வேண்டும் என்பதையும் அவர் தமது உரையில் வலியுறுத்தினார்.

தமிழ்மக்களின் விருந்தோம்பும் பண்பினை அவர் மிகவும் பாராட்டினார்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்-- நாடு கொண்டாடிய நல்விழா

பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாள் கடந்த ஆகஸ்டு 15-ஆம் நாள் தொடங்கி நாடெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள், துணை--சார்பு மன்றங்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் பல்வேறு பொது அமைப்புகள் சார்பில் ஆங்காங்கு வாய்ப்பு-வசதிகளுக்கேற்ப விழா நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

அண்ணா திருவுருவப் படம் அலங்கரிக்கப்பட்டு--ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும், கொடி ஏற்றி ஏழைகட்கு உணவு அளித்தும், சிறார்கட்கு இனிப்பு வழங்கியும், பள்ளி மாணவ-மாணவியருக்குச் சீருடை, எழுதுபொருள்கள் வழங்கியும், சொற்பொழிவுகள்--கவியரங்குகள்--இசையரங்குகள் நடத்தியும் விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆங்காங்கு கொண்டாடப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றன:—

வண்ணைப் பகுதி

15—9—72 காலை 7-30 மணிக்கு திரு. த. வெங்கடேசன் எம்.சி. வண்ணையிலுள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க -- விழா தொடங்கியது; கிளை -- சார்பு மன்றங்கள் -- பொதுமக்கள் சார்பில் அண்ணா சிலைக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தொடர்ந்து பகுதிக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் மு. நடராசன் தலைமையில் மு. வேதாசலம் எம்.எல்.ஏ. கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினார்.

திரு. கே. எம். கண்ணபிரான் எம்.சி. அண்ணா உருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசினார்.

பகுதிச் செயலாளர் திரு. பி. ஏ. என். இராசரத்தினம், செல்வி எஸ் பி. சற்குணம் எம்.சி., இரா. முமனோகரன் எம்.சி, டி. எஸ் வேலன், ம. நாகலிங்கம், மை. அன்பு ஆகியோர் உரையாற்றினர்.

துணைச் செயலாளர் திரு. ஏ. இராசகோபால் இனிப்பு வழங்கி நன்றி கூறினார்.

இரவு இசை முரசு நாகூர் அனிபா எம்.எல்.சி. குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பகுதி முழுவதும் கழகத் தோரணங்கள் கட்டப்பட்டு--விழா எடுக்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்றது.

அண்ணா சிலை வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுப் பொதுமக்கள் பார்வைக்காக செப். 15, 16, 17-ம் நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டது.

சென்னை -- வண்ணை

சி. பா. ஆதித்தனார் தமிழ் வளர்ச்சி மன்றச் சார்பில் 17–9–72 அன்று இரவு விழா கொண்டாடப்பட்டது.

திரு. நவமணி வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. எம். துரைசாமி தலைமையேற்று விழாவினைத் துவக்கி வைத்தார்.

செல்வி எஸ் பி சற்குணம் எம்.சி. கழகக் கொடியினை ஏற்றிவைத்து, அறிஞர் அண்ணாவின் அருஞ்செயல்களைப் பற்றிப் பேசினார்.

திரு. மு. வேதாசலம் எம்.எல்.ஏ 4-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் கே. எம். கண்ணபிரான் எம்.சி, பி. கே. மூர்த்தி, இராசகோபால் ஆகியோரும் பேசினர்.

வண்ணை எம். என். சந்தானம் 'அண்ணா வாழ்கவே' என்ற பாடலை எழுதிப் படித்தார்.

திரு. எம். செல்வமணி நன்றி கூறினார்.

300 சிறுவர்கட்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

சென்னை 63-வது வட்டம்

கலைஞர் கருணாநிதி குடிசை வாழ்வோர் மன்றம -- எம்.ஜி.ஆர். இரவுப் பள்ளியின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா, செப். 15-ல் கே. சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது; பகல் 1 மணிக்கு 1000 பேருக்கு உணவு வழங்கப்பட்டது.

திரு. பி. சிவசங்கரன், கே. எஸ் வான்மதி, இளம்பரிதி, கு. பரமானந்தம், சா. முத்து, இரா. நடராசன் மற்றும் பலர் பேசினர்.

செப். 16-ந் தேதி இரவு 8 மணிக்கு, கு. பரமானந்தம் எழுதிய 'அறிஞர் தந்த கலைஞர்' நாடகம் நடைபெற்றது.

இரவு 10 மணிக்கு, தனராஜ் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

செயலாளர் எஸ். இராசு நன்றி கூறினார்.

சென்னை -- காசிமேடு

மு. கருணாநிதி நற்பணி மன்றத்தில் செப். 15-ல் திரு. மு. இராசு முன்னிலையில்--திரு. கு. கோவிந்தசாமி தலைமையில் தோழர்கள் எம். வி. கேசவன், இரா. காசிநாதன், ஆர். கோபால், வி. கோவிந்தசாமி, நா. இராதாகிருட்டினன் ஆகியோர், 300-க்கு மேற்பட்ட ஏழைச் சிறுவர்கட்கும், 64 கண்ணிழந்தோர்--உடல் ஊனமுற்ற பெரியவர்கட்கும் இலவசமாக முடிதிருத்தும் நற்பணியினைச் செய்தனர்.

எம். ஜி. ஆர். நகர்

செங்கை மாவட்டம் சைதை வட்டம் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றச் சார்பில் 24—9—72-ல் காலையில் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மன்றத்தைச் சார்ந்த பெண் உறுப்பினர்கள் அண்ணா ஜோதியை ஏந்தி -- நகரில் உள்ள அண்ணா சிலைக்கு ஊர்வலமாகச் சென்றனர்.

மன்ற அமைப்பாளர் டி. சேது மாதவன் அண்ணா உருவச் சிலைக்கு மாலை அணிவித்தார். தி.மு.க. கிளை அவைத் தலைவர் ஏ. பெருமாள்சாமி விழாவிற்குத் தலைமை தாங்கினார். சிரணித் தலைவர் எஸ். பி. இலட்சுமணன் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

தோழர்கள் தே. கேரூபின் வட்டப் பிரதிநிதி ஆர். சிவன்குட்டி மன்றச் செயலாளர் வி. கே. எம் ரவி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் க. துரைராசன் நன்றி நவின்றார் திருமதி பேபி 300 பேர்களுக்கு பொங்கல் வழங்கினார்.

சென்னை 81, 82, 83-வது வட்டங்களில்

கழகப் பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள், 17—9—72 காலை 10-மணியளவில், 82-வது வட்டத்தில் அண்ணா பிறந்த நாள் விழாவிலும், இளைஞர் நற்பணி மன்றத் துவக்க விழாவிலும் கலந்துகொண்டார்; விழாவுக்கு சுந்தரராஜன் தலைமை வகித்தார்.

பின்னர், முனுசாமி நினைவு மன்றத்தின் சார்பில் (81-வது வட்டம்) நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு கழகக் கொடியினை ஏற்றி வைத்தார்.

அடுத்து, அண்ணா நினைவு மன்றத்தின் சார்பில் கழகக் கொடியினை ஏற்றிவைத்தார்.

பின்னர், நெடுஞ்செழியன் குடியிருப்பு நகரில் கழகக் கொடியினை ஏற்றிவைத்து இளஞ்சிறார்களுக்கு மிட்டாய்களையும், ஏழைகளுக்குச் சர்க்கரைப் பொங்கல் பொட்டலங்களையும் வழங்கினார்.

பிறகு, அறிஞர் அண்ணா நற்பணி மன்றத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு கழகக் கொடியினை ஏற்றிவைத்து அறிஞர் அண்ணா கழகத்திற்கு ஆற்றிவந்த பணிகளைப் பற்றி எடுத்துரைத்தார்.

83-வது வட்டத்தில் கழகக் கொடியினை ஏற்றிவைத்து குழந்தைகளுக்கு இனிப்பு வகைகளை வழங்கினார்.

முகமது உசேன் சாயபு தெருவில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு கழகக் கொடியினையும் அண்ணா அவர்களின் உருவப் படத்தினையும் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார்.

இவ்விழாக்களில் கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

சென்னை 80, 90-வது வட்டங்கள்

நாவலர் நற்பணி மன்றத்தின் சார்பில் டாக்டர் நடேசன் தெருவில் 24—9—72-ல் சிறப்பாக விழா நடைபெற்றது.

முத்தையா முதலி தெருவில் நடைபெற்ற விழாவிலும், இராம் நகரில் நடைபெற்ற விழாவிலும், எம். ஜி ஆர். மன்றம் -- அண்ணா படிப்பகம் ஆகியவை சார்பில் நடைபெற்ற விழாவிலும், மற்றும் கிவராசபுரத்தில் (90-வது வட்டம்) நடைபெற்ற விழாவிலும் கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நாவலர் அவர்கள் கழகக் கொடிகளை எல்லா இடங்களிலும் ஏற்றி வைத்துக் குழந்தைகளுக்கு இனிப்பும், ஏழைகளுக்கு உணவும் வழங்கினர்.

மேற்படி விழாக்களில் நாவலர் நற்பணி மன்றச் செயலாளர் ஜே எஸ். ஸ்டாலின், திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் மு. வரதராசன், கே. இராதா, குடந்தை நாதன், எம். இராசு, பி. ஆர். நாகராசன், பழைய காங்கிரசிலிருந்து விலகி கழகத்தில் சேர்த்த கருங்குடி அருணன், இராதா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

சென்னை 47-வது வட்டம்

டாக்டர் சத்தியவாணிமுத்து மன்றம் -- அமரர் அண்ணா இரவுப் பள்ளி சார்பில் 15—9—72 காலை 10-மணியளவில் மு. அறச்செல்வன் கொடியேற்றினார்; இனிப்பு வழங்கப்பட்டது.

24—9—72 மதியம் 12-மணியளவில் திரு. எஸ். ஏ. அமீர் எம்.சி. தலைமையில், வட்டச் செயலாளர் சோ. கோதண்டபாணி 1,000 பேருக்கு உணவு வழங்கினார்.

தோழர்கள் கோ. துரையரசன், சி. கி. அன்பாளன், மு. தம்பிரான், மு. கோபால், மு. சின்னப்பன், மா. பொன்னிவளவன் ஆகியோர் உரையாற்றினர்கள்.

இரவு 7-மணியளவில் கழகப் பாடகர் திரு. வேந்தை வரதராசன் குழுவினரால் கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது.

அஞ்சுகம் இல்லத்தில் அண்ணா பிறந்த நாள்

23—9—72-ல் அஞ்சுகம் இல்லத்தில் நடைபெற்ற அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நடைபெற்றது.

திருமதி அலமேலு அப்பாத்துரை அனைவரையும் வரவேற்றார்.

திருமதி வெ. குப்பம்மாள் தலைமையில் -- திருமதி விசாலட்சி நெடுஞ்செழியன் முன்னிலையில் திருமதி தயாளு கருணாநிதி கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்துச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

அஞ்சுகம் இல்லத்தின் ஆயுட்கால உறுப்பினர் திருமதி பத்மினி, சிவசுப்பிரமணியம் அமெரிக்கா செல்வதை முன்னிட்டு இல்லத்தின் சார்பில் 'கணையாழி ஒன்றினை திருமதி சரசுவதி கந்தசாமி வழங்கினார்; திருமதி தயாளு கருணாநிதி பொன்னாடை போர்த்தினார். 113-வது வட்ட மாநகராட்சி மன்ற உறுப்பினர் சோ. கி. மூர்த்தி நன்றி கூறினார்.

திருமதி புவனேசுவரி நடராசன் ஏழைகளுக்கு உணவு வழங்கினர்.

பம்பாயில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

இலட்சிய நடிகர் கலந்து கொள்கிறார்

பம்பாய், செப். 26—

பம்பாயில் அண்ணா பிறந்த நாள் விழாவைக் கொண்டாட மாதுங்கா லேபர் கேம்ப் பேரறிஞர் அண்ணா குறள் வளர்ச்சி மன்றத்தின் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

அக்டோபர் 14, 15 ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில், தமிழகத்திலிருந்து இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி., 'நம் நாடு' துணையாசிரியர் மா. செங்குட்டுவன், முன்னாள் மேயர் சா. கணேசன் ஆகியோர் வந்து கலந்துகொள்கின்றனர்.

மற்றும் பம்பாய் மத்திய தி.மு.க. செயலாளர் திரு. எஸ். தியாகராசன், தொ. து. அன்புச்செழியன், சு. வள்ளிநாயகம், நெல்லை வளவன், நெல்லை செழியன், பா. முத்துக்கிருட்டினன், களந்தை வேலன் ஆகிய தோழர்களும் கலந்து கொள்கின்றனர்.

"விழாவைபொட்டி அண்ணா பிறந்த நாள் மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கிறது" என்று மன்றச் செயலாளர் கொ. வள்ளுவன் அறிவிக்கிறார்.

கௌரவ நீதிபதி நியமனம்

சென்னை, செப். 28—

தி. மு. க. முன்னாள் மாவட்டப் பிரதிநிதியும் -- தமிழ்நாடு அரசுப் பொதுப் பணித்துறை நில, நீர்க் கோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொதுச்செயலாளராகவும், 24 ஆண்டுகளாகப் பொது சமூகத் தொண்டாற்றியும் வந்தவருமான கே. எஸ். தினகரன் கௌரவ மாநில நீதிபதியாக தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக அரசின் தொழில் வளர்ச்சி நிறுவனம்

இழப்பை ஈடுகட்டி இலாபமும் ஈட்டியுள்ளது

சிறப்புமிக்க பணிகள் குறித்து விளக்கம்

சென்னை, செப் 26—

தமிழக அரசுக்குச் சொந்தமான தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் தொடங்குவதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது.

இந்த நிறுவனத்துக்கு இந்த ஆண்டு ரூ. 6,54,000 இலாபம் கிடைத்திருக்கிறது; சென்ற இந்த நிறுவனம் ஏறத்தாழ ரூ. 78 இலட்சம் நட்டத்தில் இயங்கியது.

இந்த நிறுவனம் நடத்தும் அரசு சிமெண்டுத் தொழிற்சாலை -- அரக்கோணம் இரும்பு வார்ப்படத் தொழிற்சாலை ஆகியவை சிறப்பாக இயங்குகின்றன; இவைத் தொடர்ந்து அந்தப் பகுதிகளில் பலருக்கு தொழில்கள் ஏற்பட வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

"தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தற்போது கூட்டுத் துறையில் பல புதிய தொழில்களைத் தொடங்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

தூத்துக்குடி உரத் தொழிற்சாலை முதல் டெலிவிஷன் தொழிற்சாலை வரையில் பல தொழில்களுக்கு ஏறத்தாழ ரூ 150 கோடி முதலீடு செய்திருக்கிறோம்.

மத்திய அரசு வழங்கிய அனுமதிகள் பலவற்றைச் செயல்படுத்திப் பல புதிய தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

டெலிவிஷன் -- பேரிங்குகள் -- சிகரெட்டுகள் -- சிறப்புத் தன்மை உடைய காகிதங்கள் உட்படப் பல பொருள்களைத் தயாரிக்க இந்தத் தொழிற்சாலைகள், நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன.

அரக்கோணம் தொடர் இரும்பு வார்ப்படத் தொழிற்சாலை தொடர்ச்சியாக இரும்பு வார்ப்படங்களைத் தயாரிக்கு பணியை தொடங்கிவிட்டது; முக்கிய மூலப் பொருளான இரும்பு கழிவுகள் போதுமான அளவு கிடைத்தால் உற்பத்தியில் எந்த வித தடங்கலும் இருக்காது."

விருதை ஜெயராஜ் நிகழ்ச்சிகள்

செப். 29: கன்னிராஜபுரம்; 30: கரூர், புதுக்கோட்டை.

அக். 2: இடைப்பாடி; 8: நாரணபுரம்.

காமராசர் ஆட்சி உருவாக்கிய பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது கழக ஆட்சி

பக்தவத்சலம் காலத்தில் பட்ட கடனிலிருந்து ஏழைகளை விடுவித்தது நமது அரசு

'எதற்காக தி.மு.க. ஆட்சி விலகவேண்டும்?'-- கா. வேழவேந்தன் கேள்வி

ஓசூர், செப். 17—

ஓசூர் நகர தி. மு. க. சார்பில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தோழர்கள் பலர் பேசியபின் சிறப்புரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் கா. வேழவேந்தன் பேசிய கருத்தின் சுருக்கம் வருமாறு:—

"தமிழர்களின் நெஞ்சமெலாம் நீக்கமற நிறைந்திருக்கும் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழா, தமிழர் வாழும் இடமெல்லாம் இந்த ஆண்டு எப்போதுமில்லாத எழுச்சியுடன் கொண்டாடப்படுகிறது.

தமிழ்மொழி வாழ -- தமிழ்நாடு முதலிடம் பெற -- தமிழன் முதல் குடிமகனாக உயர -- சாதி, சமய, சனாதனச் சழக்கற்ற புதிய சமுதாயம் உருவாக -- இரவு பகலென்று பாராமல் நடமாடிக் கொண்டிருந்த அந்தத் தமிழ்த் தெய்வம் இன்று படமாகிவிட்டாலும், எல்லோரின் இதயத்திலும் நிலையான இடம் பெற்றுவிட்டது!

அறிஞர் அண்ணாவின் ஆற்றல் மிகு பணிகளில் ஒன்றுதான் திறமைமிகு கலைஞரை உருவாக்கி நிலையான ஆட்சி அமைத்துச் சென்றுள்ள காட்சியாகும்.

ஆனால், 'அண்ணாவால் உருவாக்கப்பட்ட இந்த ஆட்சியாளர்கள் வீட்டுக்குப் போகவேண்டும் -- அவர்களை வீட்டுக்கு அனுப்புங்கள்' என்கிறார் காமராசர்!

ஏன் வீட்டுக்கு அனுப்பவேண்டும்? என்ன மாபெரும் பாவங்களைத் தி. மு. க. ஆட்சி செய்துவிட்டது?

இன்று இந்தியாவிலே உள்ள மாநிலங்களில் நெல் உற்பத்தியில் முதற்பரிசுக் கேடயம் பெறும் அளவுக்கு வேளாண்மைத் துறையில் வேகம் காட்டுகிறோம் -- அதற்காக வீட்டுக்குப் போகவேண்டுமா?

இந்தியாவிலே மூன்று பம்புசெட்டுகள் ஓடுமானால், அதிலே ஒரு பம்புசெட்டு தமிழ்நாட்டிலே ஓடிக்கொண்டிருக்கிறது என்று புதிய வரலாறு படைத்திருக்கிறோமே -- அதற்காக வீட்டுக்குச் செல்லவேண்டுமா?

மைசூர்க்காரரிடத்திலே விலைக்கு வாங்கி, அதே கன்னடியரும் எண்ணிப் பார்க்காத வகையில் குறிப்பிட்ட 1972--73-க்குள் எல்லாக் கிராமங்களிலும் ஒளிமயமான காட்சிகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோமே -- அதற்காக வீட்டுக்குச் செல்லவேண்டுமா?

காமராசராலும்--பக்தவத்சலத்தாலும் உருவாக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்குப் புகலிடம் தர மாவட்டத்திற்கு ஒரு பிச்சைக்காரர் விடுதி கட்டிக்கொண்டிருக்கிறோமே -- அதற்காக வீட்டுக்குப் போகவேண்டுமா?

லேவாதேவிக்காரரிடத்தில்கூனிக் குறுகி வாழும் ஏழைக் கடன் வாங்கிய தோழனுக்குப் பயன்படும் புரட்சிக் கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவந்துள்ளோமே--அதற்காக வீட்டுக்குப் போகவேண்டுமா?

தமிழ்நாடெல்லாம் நிலப் பிரபுக்களின் அடிமனைகளில் வீடுகட்டிக் கொண்டிருக்கின்ற ஏழை விவசாயக் கூலிகளுக்கு அந்த மனை சொந்தமாகுமென்று திட்டம் தீட்டியுள்ளோமே -- அதற்காக வீட்டுக்குப் போகவேண்டுமா?

விழிப் பார்வை இழந்த பத்து இலட்சம் பேருக்கு விழியொளி வழங்கும் சீரிய -- சிக்கனத் திட்டம் கொண்டுவந்துள்ளமைக்காக வீட்டுக்குப் போகவேண்டுமா?

காமராசரும் --- பக்தவத்சலமும் தூங்கிக்கொண்டிருந்த காரணத்தால், காலமெல்லாம் பூமிக்குள் உறங்கிக் கொண்டிருந்த சேலம் கரும்பொன்னை வெளியே எடுக்கும் மாபெரும் தொழிற்சாலையைத் தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணுகிறோமே-அதற்காக வீட்டுக்குப் போகவேண்டுமா?

ஏழைகளுக்குப் புதுவரி ஏதும் போடாமல் ஆளுகின்ற தவறுக்காக வீட்டுக்குப் போகவேண்டுமா?

மத்திய அரசுக்கு வாலைக் குழைத்துக் கொண்டிராமல், எல்லாத் திட்டங்களுக்கும் நிதிகளைத் தட்டிக் கேட்கிறோமே -- அதற்காக வீட்டுக்குப் போகவேண்டுமா?

தமிழ்நாடு அமைதியுடன் ஆளப்படுகிற குற்றத்திற்காக நாம் வீட்டுக்குப் போகவேண்டுமா?

காமராசர் எந்தக் காரணத்திற்காகக் கழகம் வீடு திரும்பவேண்டும் என்று சொல்கிறார் என்பதைத் தெளிவாகக் கூறட்டும்!

அவருடைய அரசியல் அரிப்பையும் -- ஆட்சிக்கு வந்துதீர வேண்டும் என்ற வெறியுணர்வையும் தமிழ்மக்கள் அறியாமலா இருக்கிறார்கள்?

கங்கை-காவிரி இணைப்பு: ஆய்வு வேலை விரைவில் துவங்கும்

நீர் வளத்தைத் தேசிய உடைமை ஆக்கச் சட்டம் வருகிறது

மத்திய அமைச்சர் கே. எல். ராவ் விளக்கம்

புதுடில்லி, செப். 28—

!! நாட்டில் பெரிய நதிகளை இணைக்கும் திட்டத்துக்கான ஆய்வு வேலைகள் விரைவில் துவங்கும்.

!! நீர் வளத்தை 'தேசிய உடைமை' என்று அறிவிக்க வகை செய்யும் ஒரு சட்டம் அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

' ஐ. நா. நிபுணர்கள் குழு அறிக்கை, மத்திய அமைச்சரவையின் பரிசீலனையில் இருக்கிறது ''

என்று, மத்திய பாசன – விசைத்துறை அமைச்சர் டாக்டர் கே எல். ராவ், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தேசிய நீர் கிரிட்டின் முக்கிய அம்சங்களை அவர் விளக்குகையில், 'இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று கங்கையைக் காவிரியுடன் இணைப்பதாகும்' என்று குறிப்பிட்டார்.

தேசிய நீர் கிரிட்டின் முக்கிய அம்சங்கள் வருமாறு:—

கங்கை -- காவிரி இணைப்புக்கால்வாய், சோனே -- நர்மதா -- தப்தி -- கோதாவரி -- கிருஷ்ணா -- பெண்ணாறு நதிகளின் வடிநிலப் பகுதிகள் வழியாகச் செல்லும்.

பிரம்மபுத்திராவையும் --- கங்கையையும் இணைப்பது.

நர்மதையிலிருந்து இராஜஸ்தானுக்குக் கால்வாய் அமைப்பது.

இராஜஸ்தானில் ஆஜ்மீர் அருகில் உள்ள பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்க சாம்பல் நதியிலிருந்து கால்வாய் ஒன்றை அமைப்பது.

மகா நதியிலிருந்து கடலோரப் பாசனப் பகுதிகளுக்கு இணைப்புக் கால்வாயை அமைப்பது; இதர கால்வாய்களுடன் இணைப்பை ஏற்படுத்துவது.

ஐ. நா. நிபுணர்கள் குழு, இந்தத் திட்டத்துக்குச் சாதகமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளது; ஆனால் மத்திய அமைச்சரவை இன்னும் இதற்கு அங்கீகாரம் அளிக்கவில்லை.

'' தேசிய நீர் கிரிட் திட்டம் முழுவதுக்கும் ரூ. 2,875 கோடி செலவாகும் என்று ஐ. நா. குழு மதிப்பிட்டுள்ளது; விரிவான ஆய்வும் பணிக்கு 5 ஆண்டுகள் முதல் 8 ஆண்டுகள் ஆகும் என்றும், சுமார் 1,000 எஞ்சினீயர்களை இப்பணியில் அமர்த்த வேண்டியிருக்கும் ''

என்று டாக்டர் ராவ் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:--

''விரிவான ஆய்வும் பணிகள் முடிவடைந்தவுடன் இந்தத் திட்டத்துக்குச் செலவு குறையலாம்; உதாரணமாக, கங்கை-காவிரி இணைப்பு மொத்த நீளம் 1,642 மைல்; ஆனால் 650 மைலுக்குத்தான் புதிய கால்வாய்களை அமைக்க வேண்டியிருக்கும்.

இந்தத் திட்டம் பணிகள் முடிவடைய 15 ஆண்டுகளாகும்; அதாவது, இந்தத் திட்டத்தினால் பலனடையும் 9 அல்லது 10 மாநிலங்களிலும் ஆண்டுக்கு ரூ. 100 கோடி வரையில் முதலீடு செய்ய வேண்டியிருக்கும்.

கங்கை--காவிரி இணைப்புத் திட்டத்தில், கங்கையையும்--நர்மதையையும் இணைப்பது முதல் கட்டமாக இருக்கும்.

தேசிய நீர் கிரிட்டினால் இராஜஸ்தான்--குசராத்--உத்தரப் பிரதேசம்--மத்தியப் பிரதேசம்--பீகார்--ஆந்திரப் பிரதேசம்--மைசூர்--தமிழ் நாடு--அரியானா ஆகிய மாநிலங்கள் பலன் பெறக்கூடும்.''

அமைச்சர் ப. உ. சண்முகம் டில்லி பயணம்

வருவாய்த்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள், 29—9—72 மாலை விமானம்மூலம் டில்லிக்குப் பயணமாகிறார்; 30—9—72-ல் நடைபெறும் முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு, 1—10—72 பிற்பகல் 2-மணியளவில் சென்னை வந்து சேருவார்.

பூட்டோ தரவேண்டிய பாக்கி

குசராத் அரசு கணக்கில் தகவல்

ஆமதாபாத், செப். 27—

குசராத் அரசாங்கத்துக்கு இன்றையப் பாகிஸ்தான அதிபர் ஜுல்பிகார் அலி பூட்டோ பழைய கடனாக ரூ. 464 செலுத்த வேண்டியிருக்கிறது.

பூட்டோவின் தந்தை ஷா நவாஸ் பூட்டோ, சௌராஷ்டிரத்தில் ஜுனாகத் என்ற சமஸ்தானத்தில் திவானாக இருந்தார்.

ஜுனாகத்தைப் பாகிஸ்தானுடன் இணைக்க வேண்டுமென்ற முயற்சி தோல்வியடைந்த பின்பு அவர் பாகிஸ்தானுக்குத் தப்பிச் சென்று விட்டார்.

அவர் தப்பிச் சென்றபோது, பால் வாங்கிய வகையில் அரசாங்கப் பால் பண்ணைக்கு ரூ. 464 செலுத்த வேண்டியிருந்தது; இது ஒவ்வொரு சான்றேடாக மாறி, 1960-லிருந்து குசராத் அரசாங்கத்தின் கணக்கில் இருந்து வருகிறது.

இந்தப் பணத்தை எப்படிப் பெறுவது என்று ஒருவருக்கும் விளங்கவில்லை; ஒருவேளை இந்தக் கணக்குத் தீர்க்கப்படாமலே போகுமோ என்றுகூட அதிகாரிகள் எண்ணுகின்றனர்.

கைத்தறித் துணிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை

டில்லியில் அமைச்சர் மாதவன் கோரிக்கை

புதுடில்லி, செப். 29—

தமிழ்நாட்டில் தேங்கிக் கிடக்கும் ஏராளமான கைத்தறித் துணிகளை விற்பதற்குத் தனி உதவி அளிக்குமாறு மத்திய அரசைத் தமிழ்நாடு அரசு கேட்டிருக்கிறது.

கூட்டுறவுத் துறையிலும் -- தனியார் துறையிலும் ரூ. 11 கோடி அளவுக்குக் கைத்தறித் துணி தேங்கியிருப்பதாகவும், கூட்டுறவுத் துறையில் மட்டும் தேங்கியிருப்பது ரூ. 8 கோடிக்கு இருக்குமென்றும் தொழில் அமைச்சர் சே. மாதவன் கூறினார்.

புதுடில்லியில் அயல்நாட்டு வர்த்தகத்துறை துணையமைச்சர் ஏ. சி. ஜார்ஜை அவர் சந்தித்துப் பேசினார்.

தீபாவளியின்போது 'ரிபேட்' அளிப்பதற்காக மாநில அரசுக்கு மத்திய அரசு உதவி அளிக்க வேண்டுமென்று அமைச்சர் மாதவன் கேட்டுக் கொண்டார்.

'ரிபேட்' அளிப்பதற்காக மாநில அரசு ஏற்கனவே ரூ. 1.40 கோடி கொடுத்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

'' கையிருப்பிலுள்ள கைத்தறித் துணிகளை விற்பதற்காக மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உதவி அளிக்கும் '' என்று அயல்நாட்டு வர்த்தக அமைச்சர் எல். என். மிஸ்ரா நாடாளுமன்றத்தில் உறுதி கூறியிருப்பதைவொட்டித் தனி உதவி அளிக்குமாறு தாம் கேட்டதாகவும் அமைச்சர் சொன்னார்.

தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்களின் சிரமங்கள் குறித்துத் தமிழ்நாடு முதலமைச்சர் ஏற்கனவே தலைமையமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்; அதை அடுத்தே அமைச்சர் மாதவன் வெளிநாட்டு வர்த்தகத் துறை அமைச்சரைச் சந்தித்தார்.

கைத்தறித் தொழிலின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக மாநில அரசு சில திட்டவட்டமான -- நீண்டகால யோசனைகளைத் தெரிவித்திருப்பதாக ஒரு பேட்டியில் அமைச்சர் மாதவன் கூறினார்.

'' கைத்தறிக்கெனச் சில இனங்களை ஒதுக்குப்போது, கைத்தறி நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் வழங்குவது ஆகியவை அந்த நடவடிக்கைகளில் சிலவாகும் '' என்றார்.

அமைச்சர் மாதவன் பஞ்சாபில் நான்கு நாட்கள் சுற்றுப்பயணம் செய்துவிட்டுச் சென்னைக்குத் திரும்பும் வழியில் டில்லிக்கு வந்தார்.

இங்கு அவர், பெட்ரோலிய -- இரசாயனத்துறை அமைச்சர் எச். ஆர். கோகலேயை சந்தித்துப் பேசினார்; சென்னை நகரில் மருந்துகள் -- பூச்சிக் கொல்லி மருந்துகள் உற்பத்திக்கான தனியார் துறை திட்டம் ஒன்றுக்கு லைசென்சு வழங்குவதைத் துரிதப்படுத்துமாறு அவர் வற்புறுத்தினார்; இந்தத் திட்டம் ரூ. 4 கோடி செலவில் மேற்கொளளப்படும்.

குடும்பக் கட்டுப்பாடு-- முதல்வர் வலியுறுத்தல்

வேலூர், செப். 28

'குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் வெற்றியடையாவிட்டால் வளர்ச்சித் திட்டத்தில் எவ்வளவுதான் பணத்தைக்கொட்டினாலும் அது வீண் விரயமாகத்தான் முடியும்''

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

''குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் கடந்த ஆண்டில் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மையாக இருந்தது; இந்த ஆண்டும் அந்தச் சாதனையை நிலைநாட்டும் என்று நம்புகிறேன்.''

குழந்தைகள் கலைக் களஞ்சியம் வெளியீட்டு விழா

குழந்தைகள் கலைக் களஞ்சியம் ஐந்தாம் தொகுதி வெளியீட்டு விழா, 30—9—72 மாலை 6. மணிக்கு அண்ணா சாலை மாவட்ட நூலகக் கட்டிடத்தில், தி. க. அவிஞசிலிங்கம் தலைமையில் நடைபெறும்; மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், கலைக் களஞ்சியத்தை வெளியிடுவார்; திரு. ம. பொ. சிவஞானம் பாராட்டுரை வழங்குவார்.

நடக்க இருப்பவை

அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

29--9--72

சென்னை 21-வது வட்டம்

எம். ஜி. ஆர். நற்பணி மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு; பேசுவோர்: இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம். பி., எம். குமார், எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., இரா. அரங்கநாதன் மற்றும் பலர்.

தப்பளாம்புலியூர்

தி.மு.க.--தி.வி.தொ.மு. சங்க சார்பில் மாலை 6-மணிக்கு கடைத் தெருவில்; தலைவர்: வை. சுப்பிரமணியம்; பேசுவோர்: அ. சந்தானம், தாழை மு. கருணாநிதி எம்.எல்.ஏ., அ. இராசமாணிக்கம் எம்.எல்.ஏ., எஸ். எஸ். பாட்சா, கே.ஏ. தியாகன், கணேசன், சு. தட்சிணாமூர்த்தி, எஸ். வி. கல்யாணசுந்தரம் மற்றும் பலர். (இரவு முருகு பாண்டியன் கலை நிகழ்ச்சி நடைபெறும்)

ஆண்டிபட்டிக்கோட்டை

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு; தலைவர்: எஸ். மல்லையன்; பேசுவோர்: ஜி. மராங்குசம் எம்.எல்.சி., எஸ். நல்லசாமி எம்.எல்.ஏ., பி. முத்துசாமி எம்.எல்.ஏ., வி. எம். அப்துல் ஜப்பார் எம்.எல்.ஏ., என். கே. காந்தி, பரமத்தி சண்முகம், எஸ். தம்பித்துரை மற்றும் பலர்.

30--9--72

காவேரி நகர்

தி. மு. க. மற்றும் துணை மன்றங்கள் சார்பில் மாலை 6 மணிக்கு கலைவாணர் திடலில்; தலைவர்; கோ. முத்தையா; பேசுவோர்: ஆ. திராவிடமணி, எஸ். ஜி. கிருஷ்ணன், க. வீரையா எம்.பி., வீ. சா. இளஞ்செழியன் எம். எல்.ஏ., க. தங்கராசு, பா. செழியன் எம்.சி., எம். எஸ். அப்துல் மஜீது எம்.சி., ஆர். கிருஷ்ணமூர்த்தி, எஸ். இராதாகிருஷ்ணன மற்றும் பலர்.

செங்கோட்டை

இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் மாலை 6 மணிக்கு விசுவநாதபுரம் அண்ணா திடலில்; தலைவர்; வ. நம்மாழ்வார்; பேசுவோர்: தா. கிருட்டிணன் எம்.பி., க. மு. கதிரவன் எம்.எல்.ஏ., டி. எஸ். திரவியம், மா. நடராசன், சையது முகம்மது. ஞானப்பிரகாசம். (இரவு 10 மணிக்கு நெல்லை கண்டசாலா குழுவினரின் இசை நிகழ்ச்சி.)

ஆத்தூர் (சேலம்)

நகர தி. மு. க.--எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு பஸ் நிலையத் திடலில்; தலைவர்: டி. கே. மாதவன்; பேசுவோர்: ஆர். எம். வீரப்பன், ஓ. ஏ. கே. தேவர், வி. முனிவேல் எம்.எல்.ஏ., எம். மாரிமுத்து எம்.எல்.ஏ., க. இராமசாமி, ஜி. என். பெரியசாமி, ப. ஆ. ஆறுமுகம் எம்.சி., பி. எஸ். அம்மாயிரம். (மாலை 3-மணிக்கு உயர்நிலைப் பள்ளியிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்.)

★

அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்:

சென்னை 63-வது வட்டம் கே. வி. கே. சாமி நினைவு மன்றச் சார்பில் 30—9—72 காலை 9-மணிக்கு நுங்கம்பாக்கம் செயலட்சுமிபுரத்தில் கே. எஸ் வான்மதி முன்னிலையில் இராம. அரங்கண்ணல் எம். எல்.ஏ. கொடியேற்றுவார்; எம். எஸ். இராமச்சந்திரன் இனிப்பு வழங்குவார்; இரவு 8-மணிக்கு எஸ். எஸ். தென்னரசு தலைமையில் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

கடத்தல் அரிசி பறிமுதல்

ஐதராபாத், செப். 28—

தமிழ்நாட்டுக்கு அரிசி கடத்திச் செல்ல முயன்ற ஒரு லாரியை, ஆந்திரக் கண்காணிப்புத் துறை அதிகாரிகள் சத்தியவேடுக்கு அருகில் செவ்வாயன்று மடக்கிப் பிடித்தனர்.

அந்த லாரி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது; லாரியும் அதிலிருந்த 138 அரிசி மூட்டைகளும் சேர்ந்து ரூ. 53,000 இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பறிமுதல் தொடர்பாக சத்தியவேடு ஊராட்சியின் முன்னாள் தலைவர் கைது செய்யப்பட்டார்.

நிஜாமாபாத்தில் ஓர் அரிசி ஆலையில், கடந்த செவ்வாயன்று நடந்த மற்றொரு திடீர்ச் சோதனையில் ரூ. 60,000 மதிப்புள்ள 583 குவிண்டால் நெல் பறிமுதல் செய்யப்பட்டது.

கோதுமையுடன் இரயில வாகன்கள் மறைந்த மாயம்!

பஞ்சாப் -- அரியானா மாநிலங்களிலிருந்து சரக்கு இரயில் மூலம் ஒரிசாவுக்குக் கோதுமை அனுப்பப்பட்டது; இதில் 800 டன் கோதுமையைக் கொண்ட 27 இரயில வாகன்கள் இடைவழியிலேயே காணமற் போய் விட்டன.

இத்தகவலை ஒரிசா மாநில அமைச்சர் நீலமணி ரௌத் ராய், ஒரிசா சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

சிறையிலிருந்து வெளிவர மறுப்பு

பீகார் ஆசிரியர்களின் பிடிவாதம்

பாட்னா, செப். 28—

செப்டம்பர் 7-ந்தேதியிலிருந்து பாட்னாவில் அரசுத் தலைமைச் செயலகம் முன்பு 'தர்ணா' நடத்தி கைதாகிச் சிறையிலுள்ள தனியார் பள்ளி ஆசிரியர்களை விடுதலை செய்ய அரசு உத்தரவு பிறப்பித்து விட்டபோதிலும், இந்த ஆசிரியர்கள் சிறைகளிலிருந்து வெளிவர மறுப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

கிளர்ச்சி நடத்திய ஆசிரியர்கள் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுவது என்றும், அவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்வது என்றும் அமைச்சரவை முடிவு செய்தது.

பீகார் மாநில உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் சங்கத்திடமிருந்து கட்டளை வரும் வரையில் விடுதலை உத்தரவை தாங்கள் ஏற்பதற்கில்லை'' என்று ஆசிரியர்கள் மறுத்துவிட்டதாக அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

'' தனியார்துறை உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைமீது இதுவரை உடன்பாடு எதுவும் ஏற்படாததால், எங்கள் வேலைநிறுத்தக் கிளர்ச்சி நீடிக்கும்'' என்று ஆசிரியர்கள் சங்கம் அறிக்கை விட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் [illegible] வெளியிடப்படுகிறது.